**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**
Case No.CC.73/2021
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : பிரசில்லா | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of January 2024.

03.01.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். கடந்த 16.02.2020ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நான் வசித்து வரும் ஜாகீர்உசேன் தெருவில் சத்தம்கேட்டது. நான் சத்தம்கேட்டு அசா.1 பிரேமலதா வீட்டிற்கு சென்றேன். அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. அங்கிருந்தவர்கள் கன்னிச்சேரியை சேர்ந்த ஒரு பையன் சென்று பிரேமலதாவின் சேலையை பிடித்து இழுத்துவிட்டதாக கூறினார்கள். உடனே அசா.1 பிரேமலதா அவரது கணவருக்கு போன் செய்து வரவழைத்து காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அசா.1 பிரேமலதாவின் கணவரும், நானும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அசா.2 டேவிட்பால் தான் சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் அலறல் சத்தம்கேட்டு தான் சென்றேன். எதிரிக்கும், அசா.1 பிரேமலதாவிற்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடன் யார் எல்லாம் இருந்தார்கள் என்று என்னால்

குறிப்பிட்டு கூறமுடியாது.

2) எதிரியை அசா.1 பிரேமலதா மற்றும் அசா.1ன் கணவர் டேவிட்பால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசா.2 டேவிட்பால் எனது ஊரைச்சேர்ந்தவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.